சைப்ரஸ் நாட்டின் உயரிய விருதை பிரதமர் மோடிக்கு அதிபர் நிகோஸ் வழங்கினார்

நிகோசியா, ஜூன்.17

பிரதமர் மோடிக்கு சைப்ரஸ் நாட்டின் உயரிய விருதை அந்த நாட்டு அதிபர் நிகோஸ் கிறிஸ்டோடுலிட்ஸ் வழங்கினார்.

பிரதமர் மோடி 2 நாள் பயணமாக மத்திய தரைக்கடல் தீவு நாடான சைப்ரசுக்கு சென்றார். நேற்று அதிபர் மாளிகையில் பிரதமர் மோடிக்கு பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் நிகோஸ் கிறிஸ்டோடுலிட்சுடன் பிரதமர் மோடி இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து உயர்மட்டக்குழு மட்டத்திலான பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதில் பிரதமர் மோடியுடன் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், வெளியுறவுச்செயலாளர் விக்ரம் மிஸ்ரி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்ட குழுவினரும் பங்கேற்றனர்.

பேச்சுவார்த்தையை தொடர்ந்து பிரதமர் மோடிக்கு சைப்ரஸ் நாட்டின் உயரிய விருதான '3ம் மக்காரியோஸ் ஆணைக்குரிய கிராண்ட் கிராஸ்' விருது வழங்கப்பட்டது.

இந்த விருதை அதிபர் நிகோஸ் கிறிஸ்டோடுலிட்ஸ் வழங்கி கவுரவித்தார். விருதை பெற்றுக்கொண்ட பிரதமர் மோடி, அதை இரு நாடுகளின் நட்புறவுக்கு அர்ப்பணிப்பதாக தெரிவித்தார்.

பின்னர் இந்த பயணம் குறித்து தனது எக்ஸ் தளத்தில், 'இந்தியா–சைப்ரஸ் உறவுகளுக்கு, குறிப்பாக வர்த்தகம், முதலீடு மற்றும் பல துறைகளுக்கு இந்த பயணம் குறிப்பிடத்தக்க உத்வேகத்தை சேர்க்கும்' என குறிப்பிட்டு இருந்தார்.

சைப்ரஸ் அதிபருக்கு காஷ்மீர் பட்டு கம்பளம் பரிசு

சைப்ரஸ் அதிபருக்கு ஏராளமான பரிசுகளை பிரதமர் மோடி வழங்கினார். இதில் முக்கியமாக காஷ்மீரின் கைத்தறி பட்டு கம்பளம், ஆந்திராவின் வெள்ளி கிளட்ச் பணப்பை போன்றவை முக்கிய இடம்பெற்றிருந்தன. கையால் செய்யப்பட்ட இந்த பட்டு கம்பளம் இந்தியாவின் கலாசார மற்றும் கலை பாரம்பரியத்தின் தலைசிறந்த படைப்பாகும். இது காஷ்மீர் பள்ளத்தாக்கில் திறமையான கைவினைஞர்களால் பல நூற்றாண்டுகள் பழமையான கை முடிச்சு நுட்பங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது ஆகும்.

பாரம்பரிய உலோக வேலைப்பாடுகளையும் நவீன பாணியையும் இணைத்து, வெள்ளி கிளட்ச் பணப்பை தயாரிக்கப்பட்டுள்ளது. கோவில் மற்றும் அரச பாரம்பரிய கலைகளால் உருவாக்கப்பட்ட விரிவான மலர் வடிவமைப்புகளை கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மதராசி கேம்ப் இடிக்கப்பட்டதால் டெல்லியில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க ரூ.50 லட்சம்

முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஜூன்.17

டெல்லியில், மதராசி கேம்ப் இடிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க ரூ.50 லட்சம் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள தாவது:–

டெல்லி, ஜங்புரா பகுதியில், மதராசி கேம்ப் எனப்படும் குடிசைப் பகுதியில் தமிழர்களின் வீடுகள் இடித்து அகற்றப்பட்டுள்ள சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதை உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தி டெல்லி முதலமைச்சர் ரேகா குப்தாவுக்கு, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தினை கடந்த 13.6.2025 அன்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு மற்றும் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் ஆகியோர், டெல்லி முதலமைச்சர் ரேகா குப்தாவை நேரில் சந்தித்து வழங்கியதோடு, கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு வலியுறுத்தினர்.

முதலமைச்சர் எழுதியிருந்த கடிதத்தில், பாதிக்கப்பட்ட 370 தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் பின்வரும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு டெல்லி முதலமைச்சரிடம் தனது கடிதத்தில் கோரியிருந்தார்.

பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவிற்கான அடுக்குமாடி குடியிருப்புகளை முழுமையாகப் பூர்த்தி செய்து, பாதிக்கப்பட்ட உரிமை பெற்ற 189 குடும்பங்களுக்கு வழங்கிடவும், விரைவான சமூக உள்கட்டமைப்பு மற்றும் பிரத்யேகமான போக்குவரத்து சேவைகளை வழங்கிடவும் வேண்டும்.

மீதமுள்ள 181 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வருமான உச்சவரம்பு, குடியிருப்புத் தேவைகள் மற்றும் வைப்புத்தொகை நிபந்தனைகளில் சிறப்புத் தளர்வுகளை வழங்கி, பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவிற்கான வீடுகளைப் பெறுவதற்கான தகுதியை விரிவுபடுத்த வேண்டும்.

ஜி7 தற்காலிக டெல்லி தமிழ்க் கல்விச் சங்கத்தின் பள்ளியை அனுமதிப்பதன் மூலம் தற்காலிக தமிழ் வழிப் பள்ளியை நிறுவுதல், உடனடி சேர்க்கை மற்றும் சிறப்புப் போக்குவரத்து வசதிகளுடன் அல்லது நிரந்தர வசதிகள் தயாராகும் வரை ஒதுக்கப்பட்ட இருக்கைகள் மற்றும் இடைக்கால போக்குவரத்து வசதியுடன் அருகிலுள்ள டெல்லி மாநகராட்சிப் பள்ளியில் தமிழ் பயிற்றுவிப்பை அங்கீகரித்தல் போன்றவற்றைச் செய்ய வேண்டும்.

இடம்பெயர்ந்த பெண்களுக்கு இலக்குடன் கூடிய தொழில் பயிற்சி மற்றும் குறு நிறுவன மானியங்கள் மூலம் வாழ்வாதார ஆதரவைத் திரட்ட வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில், டெல்லி நிர்வாகம் இந்தப் பிரச்சினையை மனிதாபிமான முறையில் அணுகி, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், இடம்பெயர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் சுமுகமான, கண்ணியமான மறுவாழ்வை உறுதி செய்வதற்கு அனைத்து வகையிலும் தமிழ்நாடு அரசு உதவத் தயாராக இருப்பதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில், சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒருமுறை நிதியுதவியாக தலா 8 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும், அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மசாலாப் பொருட்கள் அடங்கிய 4 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கிடவும் ஏதுவாக, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

'நீட்' தேர்வில் தோல்வி அடைந்தவர்களுக்கு ஆலோசனை வழங்கும் மையம் திறப்பு

சென்னை, ஜூன் 17–

'நீட்' தேர்வில் தோல்வியுற்றவர்களுக்கு, மனநல ஆலோசனை வழங்கும் மையம், மக்கள் நல்வாழ்வு துறை சார்பில், சென்னை தேனாம்பேட்டையில் திறக்கப்பட்டுள்ளது.

மையத்தை திறந்து வைத்து அமைச்சர் சுப்பிரமணியன் அளித்த பேட்டியில் கூறியதாவது:–

தமிழகத்தில், நீட் தேர்வு எழுதிய ஒரு லட்சத்து 1,35,715 மாணவர்களில், 76,181 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மீதமுள்ள, 59,534 பேர் தேர்ச்சி பெறவில்லை. அவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்க, முதல் கட்டமாக, 80 மனநல ஆலோசகர்களுடன், ஆலோசனை மையம் திறக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தனிமையில் இருக்கக்கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

தேர்வில் தோல்வி அடைந்த பதற்றத்தால் ஏற்படும் தூக்கமின்மை, பசியின்மை, அழுகை, கோபம், பயம், தற்கொலை எண்ணம் உள்ளிட்டவற்றில் இருந்து, அவர்களை மீட்க ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

தமிழகத்தில் 75 அரசு மற்றும் தனியார் மருத்துவ கல்லூரிகள் உள்ளன. அவற்றில், 11,850 இடங்கள் தான் உள்ளன. நீட் தேர்வில், 76,181 பேர் தேர்ச்சி பெற்றாலும், அனைவருக்கும் இடம் கிடைக்காது. எம்.பி.பி.எஸ். படிப்பை தொடர்ந்து, பல் மருத்துவம், நர்சிங், பாரா மெடிக்கல் உள்ளிட்ட 20,000க்கும் மேற்பட்ட படிப்புகளுக்கு வாய்ப்பு உள்ளது.

அதேபோல, சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி படிப்புகளில் சேரலாம். மேலும், நீட் தேர்வு இல்லாமலேயே, கால்நடை மருத்துவம், யோகா உள்ளிட்ட படிப்புகளிலும் சேரலாம். இது குறித்த விழிப்புணர்வும் ஆலோசனை மையம் வாயிலாக ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

பாஸ்போர்ட் சேவா வேன் சேவை திட்டம்: சென்னையில் மண்டல அதிகாரி தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூன்.17

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம், தொலைதூர மற்றும் வசதி குறைந்த இடங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு பாஸ்போர்ட் சேவைகளை எளிதாக பெறுவதற்காக, சென்னையில் பாஸ்போர்ட் சேவா வேன் சேவை தொடக்க விழா நேற்று நடந்தது.

விழாவுக்கு சென்னை மண்டல பாஸ்போர்ட் அதிகாரி எஸ். விஜயகுமார் தலைமை தாங்கினார். மத்திய வெளியுறவுத்துறையின் கீழ் செயல்படும் பாஸ்போர்ட் சேவை திட்டத்தின் இணை செயலாளர் கே.ஜெ.சீனிவாசா பாஸ்போர்ட் சேவா வேன் திட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து பாஸ்போர்ட் அதிகாரிகள் கூறும்போது, "பாஸ்போர்ட் சேவைகளைப்பெற, மக்கள் இனி நீண்டதூரம் பயணம் செய்ய வேண்டியதில்லை. பாஸ்போர்ட் சேவா வேன் பொதுமக்கள் வசிக்கும் இருப்பிடத்துக்கே சென்று சேவையை வழங்குகிறது. தொலைதூர மற்றும் வசதி குறைந்த இடங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு பாஸ்போர்ட் சேவைகளை எளிதாகப்பெற உதவுகிறது. பாஸ்போர்ட் சேவா போர்ட்டல் மூலம், பாஸ்போர்ட் சேவைகளைப் பெற ஆன்லைனில் பதிவு செய்யலாம்" என்றனர்.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
SHRIRAM Finance
Corporate Identity No. (CIN) L65191TN1979PLC007874
பதிவு அலுவலகம்: ஸ்ரீடவர்ஸ், மனை எண்.14ஏ, சவுத் பேஸ், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை 600 032
தமிழ்நாடு, இந்தியா Tel No: +91 44 4852 4666 Fax: +91 44 4852 5666.
Website: www.shriramfinance.in Email id: customersupport@shriramfinance.in
Toll Free No.: 18001034959

நிலையான முதலீட்டுத் திட்டத்திற்கான வட்டி விகிதங்கள் (FIP) (ஜூன் 26, 2025 முதல்)*

நிலையான முதலீட்டுத் திட்டத்திற்கான வட்டி விகிதங்கள்*	
12 - 23 தவணை	ஆண்டுக்கு 7.35%
24 - 35 தவணை	ஆண்டுக்கு 7.50%
36 - 48 தவணை	ஆண்டுக்கு 8.00%

* கீழே கொடுக்கப்பட்டுள்ள கூடுதல் வட்டி மேலே உள்ள அனைத்து வகைகளுக்கும் பொருந்தும்.
- ஆண்டுக்கு 0.05% கூடுதல் வட்டி பெண் டெபாசிட்தாரர்களுக்கு வழங்கப்படும்.

டெபாசிட்டை ஏற்றுக்கொள்வது தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

* ஜூன் 26, 2025 முதல், நிறுவனம் நிலையான முதலீட்டுத் திட்டத்தின் (FIP) கீழ் புதிய டெபாசிட்டுக்கான விண்ணப்பத்தை மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட வட்டி விகிதத்தில் மறு அறிவிப்பு வரும் வரை ஏற்கும் என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.
* நிலையான முதலீட்டுத் திட்டம் (FIP) 'ஸ்ரீராம் ஒன்' மொபைல் செயலி மற்றும் நிறுவனத்தின் இணையதளம் மூலம் மட்டுமே கிடைக்கும்.
* வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் இதர வங்கி சாரா நிறுவனங்கள் (விளம்பரம்) விதிகள், 1977 இன் படி, ஜூலை 31, 2024 அன்று 'பைனான்ஷியல் எக்ஸ்பிரஸ்' மற்றும் 'மக்கள் குரல்' ஆகிய பத்திரிக்கைகளில் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சட்டரீதியான விளம்பரத்தின் கூடுதலாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது. இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் விண்ணப்ப படிவத்தில் அச்சிடப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நிலையான முதலீட்டுத் திட்டத்தில் (FIP) முதலீடு செய்வதற்கு முன் அவற்றை கவனத்தில் கொள்ளவும்.
* நிலையான முதலீட்டுத் திட்டத்தின் (FIP) பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாறாமல் இருக்கும்.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
ஒப்பம்/–
Y.S. சக்கரவர்த்தி
நிர்வாக இயக்குனர் & தலைமை செயல் அதிகாரி
(DIN : 00052308)
இடம் : மும்பை
தேதி : ஜூன் 16, 2025

SBFC எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம் : யூனிட் எண்.103, முதல் தளம், C&M ஸ்கொயர், சங்கம் காம்ப்ளக்ஸ், சிடிஎஸ் எண். 95ஏ, 127 அந்தேரி குர்லா சாலை, கிராமம் சகாலா, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400 059 | Telephone: +912267875300
Fax: +91 2267875334 I www.SBFC.com I Corporate Identity Number: U67190MH2008PTC178270

பொது அறிவிப்பு

27.06.2025 அன்று காலை 10:30 மணிக்கு எஸ்பிஎப்சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களின் ஏலம் **எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட்டின் கீழ்கண்ட கிளைகளில்** நடத்தப்படும் என்பதை பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஏலம் விடப்படும் தங்க ஆபரணங்கள், தங்கள் நிலுவைத் தொகையைச் செலுத்தத் தவறிய எங்களது பல்வேறு வாடிக்கையாளர்களின் கடன் கணக்குகளைச் சேர்ந்தவை. இந்த கடன் வாங்கியவர்களுக்கு எங்கள் ஏல அறிவிப்புகள் முறையாக வழங்கப்பட்டுள்ளன. ஏலம் விடப்படும் தங்க ஆபரணங்கள் கிளையின் பெயருடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் பல்வேறு வாடிக்கையாளர்களின் காலாவதியான கடன் கணக்குகளுக்கு சொந்தமானது.

கிருஷ்ணகிரி கிளை முகவரி : எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட், எண்: MIG-82, நியூ ஹவுசிங் பிளாக் 1, ஆர்யபவன் ஹோட்டல் எதிரில், கட்டிகானப்பள்ளி, கிருஷ்ணகிரி 535002, AP00704366

மேலும் விவரங்களுக்கு, எஸ்பிஎப்சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் தொடர்பு எண்(கள்) 18001028012ல் தொடர்பு கொள்ளலாம்: (ஏலத்தில் விடப்பட வேண்டிய கணக்குகளின் எண்ணிக்கையை மாற்றவும், எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ஒத்திவைக்கவும் / ரத்து செய்யவும் எஸ்பிஎப்சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு உரிமை உள்ளது.)

SHRIRAM FINANCE LIMITED
PAMMAL BRANCH VEHICLE FOR SALE

S.NO.	VEH.NO.	MAKE	MODEL
1.	TN60AB-2277	JCB 3DX XTRA	2016
2.	TN85Q8660	TVS AUTO KING DELUXE BS6 CNG-P	2022

BRANCH MANAGER NUMBER: 9841329841

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி **காலை 11:00 மணிக்கு** கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

ஏலத் தேதி 26-06-2025 அன்று காலை 11.00 மணி

வ. எண்.	கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்
1	சென்னை	104142510889	கே ரவிச்சந்திரன்
2	சென்னை	104142511018	வருணா எஸ்
3	சென்னை	104142511726	டி மதனகோபால்
4	சென்னை	104142511717	முருகன் எம்
5	சென்னை	104142511755	கிரிதரன்
6	சென்னை	104142512597	ராஜேந்திர குமார்
7	சென்னை	104142512637	சத்தியராஜ்
8	சென்னை	104142512739	சுகன்யா கே
9	சென்னை	104142512767	அருள்ஜோதி லட்சுமணன்

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
SHRIRAM Finance
Corporate Identity Number (CIN): L65191TN1979PLC007874
பதிவு அலுவலகம்: ஸ்ரீடவர்ஸ், மனை எண்.14ஏ, சவுத் பேஸ், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை 600 032
தமிழ்நாடு, இந்தியா Tel No: +91 44 4852 4666 Fax: +91 44 4852 5666.
Website: www.shriramfinance.in Email id: customersupport@shriramfinance.in
Toll Free No.: 18001034959

ரூ. 10 கோடி வரை புதிய டெபாசிட்டுகள்/ புதுப்பித்தல்களுக்கான வட்டி விகிதங்கள் (ஜூன் 26, 2025 முதல்)★

ஒட்டுமொத்தம் அல்லாத டெபாசிட்					ஒட்டுமொத்த டெபாசிட்		
காலம் (மாதங்கள்)	மாதங்கள் ஆண்டுக்கு %	காலாண்டு ஆண்டுக்கு %	அரையாண்டு ஆண்டுக்கு %	ஆண்டு ஆண்டுக்கு %	வட்டி % (மாதாந்திர அடிப்படையில் ஆண்டுக்கு)	பயனுள்ள முதிர்வு ஆண்டுக்கு%	ரூ.5,000/-க்கான முதிர்வு மதிப்பு
12	7.11	7.16	7.22	7.35	7.11	7.35	5367
15 (டிஜிட்டலில் மட்டும்)	7.25	7.30	7.36	7.50	7.25	7.56	5472
18	7.16	7.20	7.27	7.40	7.16	7.53	5565
24	7.25	7.30	7.36	7.50	7.25	7.78	5777
36	7.72	7.77	7.85	8.00	7.72	8.66	6298
50	7.72	7.77	7.85	8.00	7.72	9.07	6890
60	7.72	7.77	7.85	8.00	7.72	9.39	7346

★ மேலே கொடுக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள கூடுதல் வட்டி பொருந்தும்
- மூத்த குடிமக்களுக்கு ஆண்டுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படும். (டெபாசிட்/புதுப்பித்தல் தேதியன்று 60 ஆண்டுகள் பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்)
- டெபாசிட் முதிர்வு பெற்ற அனைத்து புதுப்பித்தல்களுக்கும் ஆண்டுக்கு 0.15% கூடுதல் வட்டி
- பெண் டெபாசிட்தாரர்களுக்கு ஆண்டுக்கு 0.05% கூடுதல் வட்டி வழங்கப்படும்.

மேலே உள்ள கூடுதல் வட்டி விகிதங்கள் வருடாந்திர விகிதத்தில் பயன்படுத்தப்படும், இது மாதாந்திர, காலாண்டு மற்றும் அரை ஆண்டு விகிதங்கள் உட்பட ஒரு வருடத்திற்கும் குறைவான காலகட்டங்களுக்கான வட்டி விகிதங்களின் கணக்கீட்டில் அதற்கேற்ப காரணியாகக் கருதப்படும்.

ரூ.10 கோடிக்கு மேல் உள்ள டெபாசிட்டிற்கான வட்டி விகிதம் வெளியிடப்பட்ட விகிதத்திலிருந்து மாறுபடலாம், ஆனால் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) குறிப்பிட்ட வட்டி விகிதத்தின் உச்சவரம்புக்குள் இருக்கலாம். எந்தவொரு முதலீடுகளையும் செய்வதற்கு முன், டெபாசிட்தாரர்கள் அத்தகைய டெபாசிட் தொகைக்கான நடைமுறையில் உள்ள விகிதங்களைச் சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

டெபாசிட்டை ஏற்றுக்கொள்வது தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

* ஜூன் 26, 2025 முதல், புதிய டெபாசிட்/ பிக்சட் டெபாசிட் புதுப்பிப்புக்கான விண்ணப்பங்களை மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட வட்டி விகிதத்தில் மறு அறிவிப்பு வரும் வரை ஏற்கும் என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.
* வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் இதர வங்கி சாரா நிறுவனங்கள் (விளம்பரம்) விதிகள், 1977 இன் படி, ஏப்ரல் 24, 2025 அன்று 'பைனான்ஷியல் எக்ஸ்பிரஸ்' மற்றும் 'மக்கள் குரல்' ஆகிய பத்திரிக்கைகளில் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சட்டரீதியான விளம்பரத்தின் கூடுதலாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது. இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் விண்ணப்ப படிவத்தில் அச்சிடப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பிக்சட் டெபாசிட் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு முன் அவற்றை கவனத்தில் கொள்ளவும்.
* பிக்சட் டெபாசிட் திட்டத்தின் பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எந்தவித மாற்றமும் இல்லை.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
ஒப்பம்/-
Y.S. சக்கரவர்த்தி
நிர்வாக இயக்குனர் & தலைமை செயல் அதிகாரி
(DIN : 00052308)
இடம் : மும்பை
தேதி : ஜூன் 16, 2025

அலைடு ஸ்பெஷாலிட்டி பேப்பர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
CIN: U21093TN2008PTC068661
பதிவு அலுவலகம் : மனை எண். 17, கடை எண். 2 & 3, மாசிலாமணி நகர், மஞ்சம்பாக்கம், மாதவரம், சென்னை 600060

படிவம் எண். INC 26
[நிறுவனங்கள் (துவக்கம்) விதிகள், 2014ன் விதி 30 மற்றும் பிரிவு 13(4)–ன் கீழ்]
பிராந்திய இயக்குனர் முன்பாக, தென் பிராந்தியம், சென்னை
நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 13 துணை பிரிவு (4) மற்றும் நிறுவனங்கள் (துவக்கம்) விதிகள் 2014, விதி 30 துணை விதி (6)–ன் விஷயத்தில்
மற்றும்
அலைடு ஸ்பெஷாலிட்டி பேப்பர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் விஷயத்தில்
CIN: U21093TN2008PTC068661
நிறுவனங்கள் சட்டம் 1956–ன் கீழ் துவக்கப்பட்ட நிறுவனம் பதிவு அலுவலகம் : மனை எண். 17, கடை எண். 2 & 3, மாசிலாமணி நகர், மஞ்சம்பாக்கம், மாதவரம், சென்னை 600060

...மனுதாரர்

12 ஜூன், 2025 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை "தமிழ்நாடு மாநிலத்தில்" இருந்து "மகாராஷ்டிரா மாநிலத்திற்கு" மாற்றுவதற்காக நிறுவனத்தின் சங்க விதித் தொகுப்பில் திருத்தம் செய்வதை உறுதி செய்ய நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 13ன் கீழ் பிராந்திய இயக்குனர், தென் பிராந்தியம், சென்னை அவர்களுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை மாற்றும் திட்டத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்புதற்கான காரணத்துடன் கூடிய புகார் படிவத்தை அஃபிடவிட்டுடன் இணைத்து இந்த அறிவிப்பு விளம்பரம் வெளியான தேதியில் இருந்து பதினான்கு நாட்களுக்குள் பிராந்திய இயக்குனர் அவர்களுக்கு கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம், தென் பிராந்தியம், சென்னை, 5வது தளம், சாஸ்திரி பவன், 26 ஹாடோஸ் சாலை, சென்னை – 600006, தமிழ்நாடு என்ற முகவரியில் நேரடியாக சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை விண்ணப்பதாரர் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

குழு உத்தரவுப்படி
அலைடு ஸ்பெஷாலிட்டி பேப்பர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
ஒப்பம்/-
ஜூலிட் அன்ஸ்லெம் அலெக்சாண்டர்
இயக்குனர்
DIN 02184013
நாள்: 17 ஜூன், 2025
இடம்: சென்னை

ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்
ADITYA BIRLA CAPITAL PROTECTING INVESTING FINANCING ADVISING
பதிவு அலுவலகம் : இந்தியன் ரயான் காம்பவுண்ட், வேரவல், குஜராத் 362 266.
கார்ப்பரேட் அலுவலகம்: 12வது தளம், ஆர் டெக் பார்க், நிர்லான் காம்ப்ளக்ஸ், ஹப் மால் அருகில், கோரேகான் (கி), மும்பை 400 063, மகாராஷ்டிரா.

கோரிக்கை அறிவிப்பு

2002ம் ஆண்டு (''சட்டம்'') கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் மற்றும் 2002ம் (''விதிகள்'') வருடத்திய கடனீட்டுக் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் விதி 3–ன் கீழ்

ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட் மற்றும் ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட் இடையேயான ஒருங்கிணைப்பின் காரணமாக, 24.03.2025 அன்று அகமதாபாத்தில் உள்ள தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் முறையாகப் பதிவுசெய்யப்பட்ட 11.03.2024 தேதியிட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின்படி, கீழே உள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்து தொடர்பாக ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெ